# <u>குளித்தலை நகராட்சி</u>

09.08.2018.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு எண்.250, நாள்–24.10.2016 மற்றும் அரசாணை(பல்வகை) எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(தோ்தல்) துறை, நாள்–24.10.2016.ன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 375.ன்படி, டிசம்பர்–2016 வரை நகராட்சி ஆணையரை தனி அலுவலராக நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு எண்.236, நாள்–30.06.2018 மற்றும் அரசாணை(பல்வகை) எண்.68, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(தோ்தல்) துறை, நாள்–30.06.2018.ன்படி 31.12.2018 வரை நகராட்சி ஆணையர் தனி அலுவலராக நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1656/2016/சி1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஜுலை–2018.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுலை–2018.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 04. குளித்தலை நகராட்சி நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலைய டிரான்ஸ்பார்மர் பழுது காரணமாக குடிநீர் பிரிவின் அவசர அவசியம் கருதி 01.09.2017 முதல் 05.09.2017 வரை ஐந்து தினங்கள் 65KVA ஜெனரேட்டர் மூலம் நீரேற்று மின்மோட்டார் இயக்கப்பட்டது. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் ரூ.20,000/– குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றம் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2223/2017/இ1)

பொருள்– 05. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு டெங்கு தடுப்பு நடவடிக்கையாக பொது இடங்கள், பொது கழிப்பிடங்கள், பேருந்து நிலையம் மற்றும் விழாக்காலங்களில் கிருமி நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், குடியிருப்பு வீடுகளில் உள்ள தொட்டிகளில் பிளீச்சிங் பவுடர் தெளிக்க வேண்டியுள்ளது. எனவே, கிருமி நீக்கம் செய்ய பிளீச்சிங் பவுடர்–2 டன், சுண்ணாம்புத்தூள்–2 டன் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2485/2018/எச்1)

பொருள்– 06. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு நடவடிக்கை முதிர்வு கொசுக்களை ஒழிப்பதற்கு புகை மருந்து அடிப்பதற்கு புகைபோக்கி இயந்திரம் பழுது அடையாமல் இருக்க 2018–2019.ஆம் ஆண்டுக்கு வருடாந்திர பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. ஆதலால், பெரிய புகைபோக்கி இயந்திரம்–1, சிறிய புகைபோக்கி இயந்திரம்–6 மட்டும் வருடாந்திர பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,45,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2389/2018/எச்1)

..2..

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் ந.க.எண்.38162/பி3/2014–3, நாள்–22.01.2015.ல் அனுமதி அளிக்கப்பட்டு, 01.08.2015.ல் ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிட், சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக துப்புரவு பணி செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் 31.07.2018 முடிவடைய உள்ளது. 01.08.2018 முதல் மேலும் 3.ஆண்டுகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணி செய்ய மன்ற தீர்மானம் எண்.64, நாள்–28.03.2018.ல் அனுமதிக்கப்பட்டதன்பேரில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பு இவ்வலுவலக ந.க.எண்.1242/2018/எச்1, நாள்–11.06.2018 மூலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் வழியாக அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி செயற்குறிப்பை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் பரிந்துரை செய்து, ந.க.எண்.2392/2018/அ4, நாள்–13.06.2018.ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை எதிர்நோக்கி, இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் குறைவாக இருப்பதினால் தொடர்ந்து 52 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 01.08.2018 முதல் 31.10.2018 வரை மூன்றுமாத காலத்திற்கு இந்நகராட்சியின் அவசர அவசியம் கருதி ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிட், சென்னை நிறுவனத்தின்மூலம் 52 துப்புரவு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளவும், தற்போது வழங்கப்படும் தினக்கூலியின்படி செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). பொதுமக்களின் அத்தியாவசிய பணியான பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவை எதிர்நோக்கி ரிலையன் ஃபெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிட், சென்னை நிறுவனத்தின் மூலம் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 01.08.2018 முதல் 31.10.2018 முடிய மாவட்ட ஆட்சியர் அவர்களின் தரவிலைப்பட்டியலின்படி தினக்கூலி வழங்கலாம். இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து (Or) திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.855/2018/எச்1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.அ.வ.சையத் முஸ்தபா கமால் அவர்கள் அலுவலக பணி நிமித்தமாக கீழ்க்கண்டவாறு வெளியூர் சென்றுவந்தமைக்கு பயணப்படி தொகை ரூ.19,750/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பயண தேதி | பயண ஊர் | பயணத்தின் காரணம் | பயணப்பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | 26.04.2018 | சென்னை | புதிய பேருந்து நிலையம் இடம் தொடர்பாக ஆணையர், HR&C அவர்களை சந்தித்து வரப்பெற்றது மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை சந்தித்து வரப்பெற்றது. | 2630.00 |
| 2) | 07.05.2018 | சென்னை | " " | 2630.00 |
| 3) | 21.05.2018 | சென்னை | நீர் மேலாண்மை தொடர்பாக சென்னையில் நடைபெற்ற பயிற்சி பட்டறையில் கலந்துகொள்ளப்பட்டது. | 2630.00 |
| 4) | 28.05.2018 முதல் 01.06.2018 வரை | ஹைதராபாத் | Integrated Capacity Building Under CBUD of ULBs Training at Engineering Staff College of India, Hyderabad-32. | 6600.00 |
| 5) | 03.07.2018 | சென்னை | SWM மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கையாளுதல் தொடர்பான சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்ளப்பட்டது. | 2630.00 |
| 6) | 23.07.2018 | சென்னை | புதிய பேருந்து நிலையம் இடம் தொடர்பாக ஆணையர், HR&C அவர்களை சந்தித்து வரப்பெற்றது மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை சந்தித்து வரப்பெற்றது. | 2630.00 |
| | | | மொத்தம் | 19750.00 |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1245/2018/அ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி எல்லைக்குள் பணிபுரியும் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி பணியாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான தொழில்வரி தொகையினை ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை உயர்த்திக்கொள்ள அனுமதி வழங்கி வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 12.01.1999.ஆம் தேதிய அரசாணை எண்.11ன்படி, 01.10.2018.ஆம் தேதிமுதல் 25% முதல் 35% வரை தொழில்வரி தொகையினை உயர்த்திக்கொள்ள வரப்பெற்ற 21.05.2018.ஆம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.12503/2018/ஆர்1 எண்ணிட்ட சுற்றறிக்கையின்படி, இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு தொழில்வரி உயர்வு செய்யப்பட்டதை பின்வருமாறு வரிசை எண்.1.க்கு தொழில்வரி இல்லை. வரிசை எண்.2 முதல் 5 முடிய உள்ள இனங்களுக்கு 01.10.2018 முதல் 30% உயர்வு செய்யலாம். மேலும், வரிசை எண்.6.க்கு தொழில்வரி அதிகபட்ச உச்சவரம்பின்படி ரூ.1250/– என திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டதை மன்ற தீர்மானம் எண்.108, நாள்–01.06.2018.ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

| **6.மாதத்தில் பெறும் மொத்த வருமானம்(ஊதியம்)** | | **01.10.2018.முதல் 30% உயர்வுசெய்தால் வரப்பெறும் தொழில்வரி ரூ.** |
|---|---|---|
| 1) | ரூ.21000/– வரை | இல்லை |
| 2) | ரூ.21001/– முதல் 30000/– வரை | 165 |
| 3) | ரூ.30001/– முதல் 45000/– வரை | 417 |
| 4) | ரூ.45001/– முதல் 60000/– வரை | 823 |
| 5) | ரூ.60001/– முதல் 75000/– வரை | 1239 |
| 6) | ரூ.75001/–ம் அதற்குமேல் | 1250 |

மேற்கண்ட தொழில்வரி உயர்வு தொடர்பாக 08.07.2018 அன்று மாலை முரசு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, அதில் ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் 30–நாட்களுக்குள் இந்நகராட்சிக்கு எழுத்துமூலமாக அளிக்க பொதுமக்களிடம் கோரப்பட்டது. ஆனால்,மேற்கண்ட உயர்வுக்கு எவ்வித ஆட்சேபணைகளும் எழுத்துபூர்வமாக 30–தினங்கள் கடந்தும் பெறப்படவில்லை என்பதால், 01.10.2018 முதல் தொழில்வரி உயர்வு செய்ததை அமுல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.240/2017/அ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஏதுவாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைகளின்படி, இந்நகரில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை தரம்பிரித்து நுண்உரக்கிடங்கு அமைத்து, உரமாக மாற்ற, நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் நவீன உரக்கிடங்கில் கொட்டப்பட்டு உள்ள குப்பைகளை பயோ மைனிங் முறைப்படி அப்புறப்படுத்தவும், முதன்மை சேகரிப்பு பணிகளுக்கு 3 பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் வாங்கவும், கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1) | அ). வார்டு எண்.24,அண்ணாநகர் பூங்கா மற்றும் வார்டு எண்.14, ஜெம்மகால் அவென்யூ பூங்கா–2 ஆகிய இடங்களில், தலா 2TPD கொள்ளவுகளின்படி நுண்உர கிடங்குகள் அமைத்தல் | 60.00 |
| | ஆ). நுண் உரக்கிடங்குகளுக்கு சுற்றுசுவர் கட்டுதல் | 10.48 |
| 2) | முதன்மை சேகரிப்பு பணிகளுக்காக பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் 3 எண்ணிக்கை வாங்குதல் | 5.40 |
| 3) | குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் நவீன உரக்கிடங்கில் பயோமைனிங் முறையில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்றுதல். | 340.00 |
| | மொத்தம் | 415.88 லட்சம் |
| (ரூபாய் நானூற்று பதினைந்து லட்சத்து, எண்பத்தெட்டாயிரம் மட்டும்) | | |

மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதிபெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). நகராட்சி நிதிநிலையை கருத்தில்கொண்டு, மதிப்பீட்டுத் தொகை முழுவதும் முழுமான்யமாக வழங்க கோரலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

*******

# <u>குளித்தலை நகராட்சி</u>

09.08.2018.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 136 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 137 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 138 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 139 | பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 140 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 6 | 6 | 141 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 7 | 7 | 142 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 143 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 144 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 145 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.